தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**16.04.2013 A.M**

---

## திருந்திய நெல் சாகுபடி செய்ய உழவர் பெருவிழாவில் அறிவுரை

அதிக விளைச்சலை தரக்கூடிய திருந்திய நெல் சாகுபடி முறையை விவசாயிகள் பின்பற்ற வேண்டும் என கும்மிடிப்பூண்டியை அடுத்த பல்லவாடா மற்றும் பூவலை ஊராட்சிகளில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற உழவர் பெருவிழாவில் வேளாண் அதிகாரிகள் அறிவுரை வழங்கினர்.

கும்மிடிப்பூண்டியை அடுத்த பல்லவாடாவில் உழவர் பெருவிழா ஊராட்சித் தலைவர் ரமேஷ்குமார் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. வேளாண் விற்பனை மற்றும் வணிகப் பிரிவு அலுவலர் அருள்முருகன், உதவி வேளாண்மை துறை அலுவலர்கள் சிவகுமார், சுகுணா, சாரதி, ஆத்மா மணி முன்னிலை வகித்தனர்.

வேளாண்மை உதவி இயக்குனர் சண்முகையா பேசுகையில், திருந்திய நெல் சாகுபடி முறையை விவசாயிகள் பின்பற்றுவதன் மூலம் குறைந்த முதலீட்டில் அதிக விளைச்சலை பெறலாம். மேலும், வேளாண்மைத் துறை சார்பாக மான்ய விலையில் ஜிப்சம் போன்ற உரங்களும் இடுபொருட்களும் வழங்கப்படுவதை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

தொடர்ந்து துணை வேளாண் அலுவலர் ராஜேந்திரன் பேசுகையில், உயிரி உரங்கள் மான்ய விலையிலும் இலவசமாகவும் விவசாயிகளும் வழங்கப்படுவதோடு பஞ்சகவ்யா உரம் தயாரிக்க விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது என்றார்.

கால்நடை மருத்துவர் சரவணன் பேசுகையில், கால்நடைத் துறை சார்பாக அரசின் விலையில்லா கறவை மாடுகள், ஆடுகள் வழங்கும் திட்டத்தோடு தற்போது நாட்டுக் கோழி வளர்ப்பு திட்டமும் அமல்படுத்தப்பட்டு உள்ளது என்றார்.

ஊராட்சித் தலைவர் ரமேஷ்குமார், விவசாயிகளுக்கு அரசின் ஒருங்கிணைந்த கையேட்டையும், விளக்க புத்தகத்தையும், இடுபொருள்களையும் வழங்கினார். வேளாண் உதவி மைய மேலாளர் திருநாவுக்கரசு நன்றி கூறினார்

பூவலை ஊராட்சி: கும்மிடிப்பூண்டி அடுத்த பூவலை ஊராட்சியில் ஊராட்சி மன்ற தலைவர் துரைக்கண்ணு தலைமையில் நடைபெற்ற உழவர் பெருவிழாவில் 300க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டனர்.

## திண்டுக்கல் மற்றும் வடமதுரை வட்டத்தில் உழவர் பெருவிழா நடைபெறும் இடங்கள்

திண்டுக்கல் மற்றும் வடமதுரை வட்டத்தில் உழவர் பெருவிழா நடைபெறும் இடங்கள் குறித்து அந்தந்த வேளாண்மைத்துறை உதவி இயக்குநர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளனர். திண்டுக்கல் வட்டத்தில் விழா நடைபெறும் இடங்கள் குறித்து திண்டுக்கல் வேளாண்மை உதவி இயக்குநர் வே.அருள் அரசு வெளியிட்டுள்ள செய்தி:

திண்டுக்கல் வட்டத்தில் சீலப்பாடி (ஏப்.16), கோடாங்கி நாயக்கன்பட்டி (ஏப்.17), பில்லமநாயக்கன்பட்டி (ஏப்.18), தாமைரப்பாடி (ஏப்.19), ம.மூ. கோவிலூர் (ஏப்.20), கள்ளிப்பட்டி (ஏப்.22), குரும்பபட்டி (ஏப்.23), அணைப்பட்டி (ஏப்.25), பெருமாள்கோவில்பட்டி (ஏப்.26), முத்தழகுப்பட்டி (ஏப்.27), ஜம்புளியம்பட்டி (29), இரண்டலபாறை (ஏப்.30), அ.வெள்ளோடு (மே 2), மொட்டனம்பட்டி (மே 3), சிறுமலை (மே 4) ஆகிய கிராமங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தேதியில், உழவர் பெருவிழா நடத்தப்பட உள்ளது, இதில் அந்தந்த பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என தெரிவித்துள்ளார்.

அதேபோல் வடமதுரை வட்டத்தில் உழவர் பெருவிழா நடத்தப்படும் கிராமங்கள் குறித்து வடமதுரை வேளாண்மை உதவி இயக்குநர் அ.ராணி பட்டியல் வெளியிட்டுள்ளார். அதன் விபரம்:

பிலாந்து (ஏப்.16), சித்துவார்பட்டி (ஏப்.17), கொல்லப்பட்டி (ஏப்.18), வடமதுரை(ஏப்.19), குளத்தூர் (ஏப்.20), கொம்பேறிபட்டி (ஏப்.22), மோர்பட்டி (ஏப்.23), புத்தூர் (ஏப்.25), சிங்காரகோட்டை (ஏப்.26), தென்னம்பட்டி (ஏப்.27), பாடியூர்(ஏப்.29), அய்யலூர் (ஏப்.30), ஏ.கோம்பை (மே 2), இராமநாதபுரம் (மே 3), பெசம்புள்ளி (மே 4), பாகா நத்தம் (மே 5), சுக்காம்பட்டி (மே 7), பஞ்சம்தாங்கி (மே 8), வேலாயுதம்பாளையம் (மே 9) ஆகிய கிராமங்களில் உள்ள பள்ளிகள், சமுதாயக் கூடங்கள் உள்ளிட்ட பொது இடங்களில் வைத்து நடத்தப்படும் உழவர் பெருவிழாவில், விவசாயிகள் திரளாக பங்கேற்று பயன் பெற வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளார்.

## உழவர் பெருவிழாவில் விவசாயிகளுக்கு நலத் திட்ட உதவிகள்

கொடைக்கானலில் நடைபெற்ற உழவர் பெருவிழாவில் விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

தமிழக முதல்வரின் இரண்டாம் பசுமை புரட்சித் திட்டத்தின் சார்பில் கொடைக்கானல் செண்பகனூர் பகுதியில் உழவர் பெருவிழா நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கொடைக்கானல் நகர்மன்றத் தலைவர் கோவிந்தன் தலைமை வகித்து 30-விவசாயிகளுக்கு உயிரி உரங்களை வழங்கினார். தோட்டக்கலைத் துறை துணை இயக்குனர் ராஜாமுகமது முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியில் தோட்டக்கலைத் துறை உதவி இயக்குனர் சின்ராஜ், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய இயக்குனர் ராஜாங்கம், துணைத் தலைவர் எட்வர்ட்,மேலாளர்கள் ஏபன்ராஜ், கார்த்திக் மற்றும் பொறியியல் துறை,தோட்டக்கலைத்துறை ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள், விதைச்சான்றுத் துறை,உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகளுடன் ஆலோசனை நடத்தினர். மேலும் கால்நடைத் துறை சார்பில் 25-க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம்,பால் உற்பத்தி அதிகரிப்பு குறித்த ஆலோசனை, மலக்கழிச்சல் மற்றும் பல்வேறு பிரச்னைகள் குறித்து ஆலோசனை வழங்கி இலவச மாத்திரை, மருந்து பொருட்கள் வழங்கப்பட்டன. இந் நிகழ்ச்சியில் செண்பகனூர் பகுதிகளைச் சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

கொடைக்கானலில் மழை: கொடைக்கானலில் கடந்த சில தினங்களாக பகல் நேரங்களில் மிதமான வெயிலும் மேகமூட்டமும் நிலவி வந்தது. அவ்வப் போது விட்டு விட்டு சாரல் மழை பெய்து வந்தது. இந் நிலையில் திங்கள்கிழமை பிற்பகலில் 30-நிமிடங்கள் மிதமான மழை பெய்தது. அதிகபட்சமாக 21.8 டிகிரி செல்சியஸ்ம்,

குறைந்தபட்சமாக 14.1 டிகிரி செல்சியஸ்ம் நிலவியது. அப்சர்வேட்டரி வானிலை மையத்தில் 4.5 மி.மீ மழை அளவு பதிவாகி இருந்தது.

அவ்வப்போது விட்டு விட்டு சாரல்மழை பெய்து வருவதால் கொடைக்கானலில்  குளுமையான சூழ்நிலை நிலவி வருகிறது. இதனால் சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

### பழனி அருகே உழவர் பெருவிழா துவக்கம்

பழனி அருகே பாப்பம்பட்டி வருவாய் கிராமத்தில் உழவர் பெருவிழா துவக்கப்பட்டது.

இந் நிகழ்ச்சிக்கு பழனி சட்டமன்ற உறுப்பினர் வேணுகோபாலு கலந்து கொண்டு விழாவை துவக்கி வைத்து சிறப்புரை நிகழ்த்தினார்.  பழனி ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் செல்லசாமி முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியில் வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண் பொறியியல் துறை, வாகரை மக்காச் சோள ஆராய்ச்சி நிலையம், அமராவதி சர்க்கரை ஆலை கரும்பு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.பல்வேறு துறை சார்பில் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது.

அதிகாரிகள் செயல்விளக்கமும் செய்து காட்டினர். விழாவில், ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர்.

விழா ஏற்பாடுகளை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சாந்தாமணி, வேளாண் அலுவலர்கள் காளிமுத்து, கணேசன், துணை வேளாண்மை அலுவலர் துரைச்சாமி, உதவி வேளாண்மை அலுவலர்கள், அட்மா மேலாளர் கோசல்நாத் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## "கோகோ ஆராய்ச்சியை ஒருங்கிணைக்க அமைப்பு தேவை'

கோகோ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு திட்டங்களை ஒருங்கிணைக்க தென்னிந்தியாவில் ஓர் அமைப்பை உருவாக்க வேண்டும் என தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் கு.ராமசாமி தெரிவித்தார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கொச்சியைச் சேர்ந்த முந்திரி மற்றும் கோகோ வளர்ச்சி இயக்ககம் ஆகியவை சார்பில், இந்தியாவில் கோகோ மேம்பாட்டில் ஏற்படும் பிரச்சனைகளும் தீர்வுகளும் குறித்த இரு நாள் கருத்தரங்கு திங்கள்கிழமை தொடங்கியது. இதில், துணைவேந்தர் கு. ராமசாமி பேசியது:

கோகோ, ஓர் அறிமுகப்படுத்தப்பட்ட பயிர் ஆகும். குறைந்த இடுபொருள்களை கொண்டு கோகோ விவசாயிகள் மிகவும் சிரமப்படுகின்றனர். அண்டை நாடுகளான ஐவரி கோஸ்ட், கானாவைக் காட்டிலும் இந்தியா உயர்தரமான விதைகளை உற்பத்தி செய்து வருகிறது. ஆப்பிரிக்க நாடானது 72 சதம் கோகோ உற்பத்தி செய்தபோதிலும் அதிக அளவில் குழந்தைத் தொழிலாளர்களை பயன்படுத்துகிறது.

கோகோவை தனிப் பயிராக சாகுபடி செய்வதற்கான அதிக வாய்ப்புகள் இந்தியாவில் உள்ளன. இந்தியாவில் சாக்லேட் கடைகள் பெருகி வருவதால் அறுவடைக்குப் பின் செய்நேர்த்தி மற்றும் மதிப்பூட்டப்பட்ட பொருள்கள் குறித்த ஆராய்ச்சி முக்கியத்துவம் பெறுகிறது.

மேலும், தமிழக அரசு விளைபொருள்களை சேமித்து வைப்பதற்கு குளிர்சாதன வசதியை வலுப்படுத்துவதற்காக அதிகமான நிதியை முதலீடு செய்யவுள்ளது. கோகோ ஆராய்ச்சி மற்றும்

மேம்பாட்டு திட்டங்களை ஒருங்கிணைக்க தென்னிந்தியாவில் ஓர் அமைப்பை உருவாக்க வேண்டும் என்றார்.

### பவானிசாகர் அணை நீர்மட்டம் 44.85 அடி

பவானிசாகர் அணை நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 44.85 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 150 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 309 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக 2.000 கனஅடி நீர் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 3.31 டி.எம்.சி.

### சூறாவளிக் காற்றுடன் உதகையில் பலத்த மழை!

உதகையில் கோடை சீசன் தொடங்கியுள்ள நிலையில், சூறாவளி காற்றுடன் பெய்த பலத்த மழையால் சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

வழக்கமாக கோடை சீசனின்போது பெய்யும் மழை, நடப்பாண்டில் பெய்யாததால் பகல் நேரங்களில் வெப்பமே நிலவி வந்தது. இருப்பினும் சமவெளிப் பகுதிகளுடன் ஒப்பிடுகையில் உதகையில் இதமான காலநிலையே நிலவியதால் சுற்றுலாப் பயணிகளின் கூட்டம் அதிகரித்து வந்தது. இந்நிலையில் திங்கள்கிழமை பகல் 2 மணிக்கு இடி, மின்னல், சூறாவளிக் காற்றுடன் பலத்த மழை பெய்தது.

2 மணி நேரம் நீடித்த இம்மழையால் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கியது. சாலைகளில் மழை நீர் வெள்ளம் போல பெருக்கெடுத்து ஓடியதால், வாகனங்களை இயக்க முடியாத நிலை ஏற்பட்டது.

உதகையில் தொட்டபெட்டா, அரசினர் தாவரவியல் பூங்கா சாலை, சேரிங்கிராஸ், மத்திய பேருந்து நிலையம் உள்ளிட்ட பகுதிகளில் 2 அடி உயரத்துக்கு சாலைகளில் மழை நீர் தேங்கியது. பல மாதங்களுக்கு பின்னர் பெய்த மழையால் உள்ளூர் மக்களும், சுற்றுலாப் பயணிகளும் மகிழ்ச்சி அடைந்தனர்.

இம்மழை காரணமாக குடிநீர் ஆதாரங்களுக்கு நீர் வரத்து அதிகரிக்கும் என்பதால் குடிநீர் பிரச்னையும் ஓரளவுக்கு தீர வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மேலும், மலைக் காய்கறிகளுக்கும், தேயிலைப் பயிருக்கும் இம்மழை ஏற்றதாக அமைந்துள்ளதாக விவசாயிகளும் தெரிவித்தனர்.

## செங்கம் வேளாண்மைத் துறை சார்பில் உழவர் பெரு விழா தொடக்க விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

செங்கம் வேளாண்மைத் துறை சார்பில் உழவர் பெரு விழா தொடக்க விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு, ஒன்றியக் குழுத் தலைவர் எம்.கணேசன் தலைமை வகித்தார். செங்கம் பேரூராட்சித் தலைவர் சென்னம்மாள் முருகன் முன்னிலை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குநர் மாரியப்பன் வரவேற்றார். மாவட்ட வணிகவரித் துறை ஆலோசனைக் குழு உறுப்பினர் ஆர். மதியழகன், உழவர் பெரு விழாவைத் தொடங்கி வைத்துப் பேசினார். வேளாண்மைத் துறை அதிகாரிகள் விவசாயிகளுக்கு நவீன விவசாயம், அரசு மானியங்கள் குறித்து விளக்கினர்.

நிகழ்ச்சியில், மாவட்ட கவுன்சிலர்கள் வெங்கட்ராமன், ஜோதி கிருஷ்ணமூர்த்தி, வேளாண்மைத் துறை அலுவலர் ஜெயசீலன் மற்றும் விவசாயிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

## ஆசாட நவராத்திரி: முட்டை விலை ஒரேநாளில் 20 காசுகள் குறைப்பு

வடமாநிலங்களில் ஆசாட நவராத்திரி விரதம் கடைபிடிக்கப்படுவதால் அம்மாநிலங்களில் முட்டை விற்பனை குறைந்து விலையும் குறைக்கப்பட்டுள்ளது. இதன்தொடர்ச்சியாக, நாமக்கல் மண்டலத்திலும் முட்டை கொள்முதல் விலை திங்கள்கிழமை ஒரேநாளில் 20 காசுகள் குறைக்கப்பட்டு ரூ.2.90ஆக நிர்ணயிக்கப்பட்டது.

கோடை வெயில் காரணமாக பண்ணைகளில் முட்டை உற்பத்தி வெகுவாக குறைந்தது. இதற்கிடையே, நாடுமுழுவதும் முட்டை நுகர்வும் அதிகரித்ததன் காரணமாக ஏற்பட்ட தட்டுப்பாட்டை அடுத்து முட்டை விலை கணிசமாக உயர்ந்து வந்தது. அதன்படி, ஏப்ரல் தொடக்கத்தில் நாமக்கல் மண்டலத்தில் ரூ.2.70ஆக இருந்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை படிப்படியாக உயர்ந்து ஏப்ரல் 11ஆம் தேதி ரூ.3.10ஆக உயர்த்தப்பட்டது.

இந்தநிலையில், வடமாநிலங்களில் விமரிசையாகக் கொண்டாடப்படும் ஆசாட நவராத்திரியையொட்டி அம்மாநிலங்களில் மக்கள் விரதம் இருக்கத் தொடங்கியதை அடுத்து பல மாநிலங்களில் முட்டை விற்பனை சரிந்துள்ளது. இதன்காரணமாக, கொல்கத்தா, தில்லி, பர்வலா உள்ளிட்ட பல மண்டங்களில் முட்டை விலை ரூ.2.50க்கும் கீழே குறைக்கப்பட்டுள்ளது. இதன்தொடர்ச்சியாக, நாமக்கல் மண்டலத்திலும் முட்டை விலையை குறைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இதனடிப்படையில், திங்கள்கிழமை நடைபெற்ற நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் முட்டை பண்ணைக் கொள்முதல் விலையை 20 காசுகள் குறைத்து ரூ.2.90ஆக நிர்ணயிக்கப்பட்டது. எனினும், இந்த விலை மேலும் குறைய வாய்ப்பு இருக்காது என்றும் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அக்குழுவினர் கூறியது: தமிழக கடல்களில் மீன் பிடி தடைகாலம் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு முதல் அமலுக்கு வந்துள்ளது. இதற்கிடையே, மற்ற இறைச்சிகளும் மிகக்கடுமையாக விலை உயர்ந்துள்ளதால் முட்டை விற்பனை உயரும் சூழல் அமைந்துள்ளது. இதனால், தமிழகத்தில் முட்டை பண்ணைக் கொள்முதல் விலை உயருமே தவிர குறைவதற்கான வாய்ப்பு இருக்காது என்றனர்.

பிற மண்டலங்களில் முட்டை கொள்முதல் விலை நிலவரம்: சென்னை -ரூ.3.15, பெங்களூரு -ரூ.3, மைசூரு -ரூ.3.05, ஹைதராபாத் -ரூ.2.55, மும்பை -ரூ.2.88, விஜயவாடா -ரூ.2.93, கொல்கத்தா -ரூ.3.05, பர்வாலா -ரூ.2.43, தில்லி -ரூ.2.55.

## வறட்சியால் நாமக்கல்லில் சாகுபடி பரப்பு 60 சதவீதம் சரிவு

பருவமழை பொய்த்து ஏற்பட்ட வறட்சி காரணமாக நாமக்கல் மாவட்டத்தில் 2012-13ஆம் நிதியாண்டில் சாகுபடி பரப்பு 60 சதவீதம் வரை சரிந்துள்ளது. இதனால், பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணமாக ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் வழங்கிடவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டத்தில் பயிர்கள் சாகுபடி செய்யப்படும் 1.60 லட்சம் ஹெக்டர் நிலப்பரப்பில் கிழக்குக்கரை கால்வாய், மோகனூர், குமாரபாளையம் கால்வாய்கள் மற்றும் ராஜ வாய்க்கால் ஆகியவை மூலம் பள்ளிப்பாளையம், ஜேடர்பாளை யம், பரமத்திவேலூர், மோகனூர் சுற்றுவட்டார பகுதிகளில் சுமார் 20 ஆயிரம் ஹெக்டர் மட்டும் கால்வாய் பாசனம் நடக்கிறது. மற்ற பகுதிகளில் மழை மற்றும் கிணறுகளை நம்பியே பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

இதனடிப்படையில், இம்மாவட்டத்தின் 10 ஆண்டுகால சராசரி விவசாய உற்பத்தி நெல் 18018 ஹெக்டர், சிறுதானியங்கள் 53822 ஹெக்டர், பயிறு வகைகள் 22006 ஹெக்டர், எண்ணெய் வித்துக்கள் 55253 ஹெக்டர், கரும்பு 15099 ஹெட்ர், பருத்தி 3100 ஹெக்டராகும். தவிர, இம்மாவட்டத்தின் சராசரி மழையளவு 776 மில்லி மீட்டராகும்.

ஆனால், கடந்த 2012ஆம் ஆண்டில் பருவமழை பொய்த்ததன் காரணமாக இம்மாவட்டத்தில் கடந்த 5 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு 486.1 மிமீ மட்டுமே மழை பெய்துள்ளது. இதன்

காரணமாக மாவட்டம் முழுவதும் நிலத்தடி நீர் மட்டம் 1000 அடிக்கு கீழே சென்றதால் மானாவாரி நிலங்களில் பயிர் சாகுபடி முழுமையாக பாதிப்படைந்துள்ளது. தவிர, மேட்டூரிலிருந்து காவிரியில் உரிய நேரத்தில் தண்ணீர் திறக்கப்படாததால் பள்ளிப்பாளையம் சுற்று வட்டார பகுதிகளில் கிழக்குகரை கால்வாயை நம்பி நடைபெறும் சுமார் 4 ஹெக்டர் பாசனம் அடியோடு பாதிக்கப்பட்டதுடன், பரமத்திவேலூர், ஜேடர்பாளையம், மோகனூர் உள்ளிட்ட பகுதிகளிலும் விவசாய சாகுபடி பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில், நாமக்கல் மாவட்டத்தில் 2012-13ஆம் ஆண்டில் நெல் 5545 ஹெக்டர் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டு ள்ளன. தவிர, சிறுதானியங்கள் 66622 ஹெக்டரும், பயிறு வகைகள் 12155 ஹெக்டரும், எண்ணெய் வித்துக்கள் 31266 ஹெக்டரும், கரும்பு 20299 ஹெக்டரும், பருத்தி 2551 ஹெக்டரும் சாகுபடியாகியுள்ளன. இது கடந்த 2011-12ஆம் ஆண்டில் நெல் 13668 ஹெக்டரும், சிறுதானியங்கள் 84840 ஹெக்டரும், பயிறு வகைகள் 17182 ஹெக்டரும், எண்ணெய் வித்துக்கள் 37832 ஹெக்டரும், கரும்பு 26091 ஹெட்ரும், பருத்தி 3020 ஹெக்டரும் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, கடந்த 2011-12ஆம் ஆண்டைக் காட்டிலும் 2012-13ஆம் ஆண்டில் நெல் 59.44 சதவீதமும், சிறுதானியங்கள் 21.48 சதமும், பயிறு வகைகள் 29.26 சதமும், பருத்தி 15.53 சதமும், கரும்பு 22.20 சதமும் சாகுபடி சரிந்துள்ளது. சாகுபடி பரப்பு குறைந்தததை அடுத்து மாவட்டம் முழுவதும் விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இதையடுத்து, வறட்சி நிவாரணம் கோரி அரசுக்கு மாவட்ட நிர்வாகம் பரிந்துரை செய்துள்ளது. விரைவில் அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, நாமக்கல் மாவட்ட விவசாயிகள் கூறுகையில், பிற மாவட்டங்களில் ஆயக்கட்டு பாசனங்கள் அதிகளவில் மேற் கொள்ளப்படும் நிலையில் நாமக்கல் மாவட்டத்தில் பெருமளவில் கிணறுகள், ஆழ்துளை கிணறுகளை நம்பியே பாசனம் நடைபெற்றது. கடந்தாண்டு பருவமழை பொய்த்து சாகுபடி பரப்பு வெகுவாக குறைந்ததால் விவசாயிகள் பெருமளவில் பாதிக்க ப்பட்டுள்ளனர். எனவே, இம்மாவட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் நிவாரண உதவி வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தவிர, நிகழாண்டு சாகுபடி இலக்கை முழுமையாக பூர்த்தி செய்ய மானிய விலையில் பண்ணைக் குட்டைகள் அமைத்துத்தரவும், தேவையான இடுபொருட்கள் வழங்கிடவும் வேண்டும் என்றனர்.

## உழவர் பெருவிழாவில் ரூ. 3 லட்சத்தில் நலத்திட்ட உதவிகள்

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை தொடங்கிய உழவர் பெருவிழாவில் பயனாளிகளுக்கு ரூ. 3 லட்சம் மதிப்புள்ள நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார்கோவில் ஒன்றியம், கிள்ளனூரில் நடைபெற்ற உழவர் பெருவிழாவை மாவட்ட ஆட்சியர் செ. மனோகரன் தொடக்கி வைத்து விவசாயிகளுக்கு ரூ.3 லட்சம் மதிப்புள்ள நலத்திட்ட உதவிகளை வழங்கிப் பேசினார்.

இதன் மூலம், தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் சார்பில் 2 பயனாளிகளுக்கு மானியத்தில் தலா ரூ.5,020 மதிப்பிலான ராக்கர் தெளிப்பான் கருவிகளையும், கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் சிறப்பு திட்டங்களின் கீழ் விலையில்லா கறவை மாடுகள் பெற்று சிறப்பாக பராமரிக்கின்ற 10 பயனாளிகளுக்கு ரூ.19 ஆயிரம் மதிப்புள்ள பரிசுகள், விலையில்லா வெப்ி்ளாடுகளைச் சிறப்பாக பராமரித்துவரும் 15 பயனாளிகளுக்கு ரூ.19,500 மதிப்புள்ள பரிசுகளையும், ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் மூலம் 2 பயனாளிகளுக்கு தலா ரூ.1 லட்சம் பொருளீட்டு கடனுதவி, 5 விலைபொருள் விற்பனைக்குழுக்களுக்கு தலா ரூ.10 ஆயிரம் வீதம் ரூ.50 ஆயிரம் ஊக்கத்தொகை மற்றும் சுழல் நிதி உதவிகள் உள்பட மொத்தம் ரூ. 3 லட்சம் மதிப்புள்ள நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

இதில், வேளாண் துறை, வேளாண் பொறியியல்துறை, விதை சான்றளிப்புத்துறை, தோட்டக்கலைத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் திட்ட விளக்க கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன.

ஏப்.14 முதல் மே. 20 -ம் தேதி வரை மாவட்டத்தின் அனைத்து ஒன்றியங்களிலும் உழவர் பெருவிழாக்கள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தொடக்கநாளான ஞாயிற்றுக்கிழமை புதுக்கோட்டை ஒன்றியத்தில் திருமலைராயசமுத்திரத்திலும், கந்தவர்க்கோட்டை ஒன்றியத்தில் கோவிலூரிலும், திருவரங்குளம் ஒன்றியத்தில் பூவரசகுடியிலும், கறம்பக்குடி ஒன்றியத்தில் பந்தவாக்கோட்டையிலும், அறந்தாங்கி ஒன்றியத்தில் அத்தாணி தெருவிலும், ஆவுடையார்கோவில் ஒன்றியத்தில் மீமிசலிலும், மணமேல்குடி ஒன்றியத்தில் இடையாத்தூரிலும், திருமயம் ஒன்றியத்தில் ராங்கியத்திலும், அரிமளம் ஒன்றியத்தில் மிரட்டுநிலையிலும், பொன்னமராவதி ஒன்றியத்தில் இடையாத்தூரிலும்(குளவாய்ப்பட்டி), அன்னவாசல் ஒன்றியத்தில் இலுப்பூரிலும், விராலிமலை ஒன்றியத்தில் பொய்யாமணிலும் உழவர் பெருவிழாக்கள் நடைபெற்றது.

இதில், மாவட்ட ஊராட்சி தலைவர் வி.சி. ராமையா, மாவட்ட வருவாய் அலுவலர் க. நாகராசன், வருவாய் கோட்டாட்சியர் சி. முத்துமாரி உள்ளிட்டோர்ô் பேசினர்.

முன்னதாக, வேளாண் இணை இயக்குநர் பி.எம்பெருமாள் வரவேற்றார். முடிவில் குன்றாண்டார்கோவில் வேளாண் உதவி இயக்குநர் மு. சங்கரலெட்சுமி நன்றி கூறினார்.

## நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி

புதுக்கோட்டையில் இயங்கி வரும் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி மையத்தில் வருகிற 29 மற்றும் 30-ஆம் தேதிகளில் நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்த பயிற்சி முகாம் நடைபெற உள்ளது

இது குறித்து மையப் பேராசிரியர் மற்றும் தலைவர் பி.என். ரிச்சர்டுஜெகதீசன் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

நாட்டுக்கோழி வளர்ப்புப் பயிற்சியில் கலந்து கொள்ள ஆர்வமுள்ளவர்கள் புதுக்கோட்டை, அண்டக்குளம் சாலையில் மாவட்ட கால்நடை பண்ணைக்கு அருகாமையில் இயங்கி வரும், கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி மையத்தில் ஏப்ரல் 29 ஆம் தேதி காலை 10 மணிக்கு தங்களது பெயர்களைப் பதிவு செய்து கொண்டு பயிற்சியில் கலந்து கொள்ளலாம். இப்பயிற்சியில் நாட்டுக்கோழி வகைகள், கொட்டகை அமைப்பு, தீவன பராமரிப்பு, முட்டை சேகரிக்கும் முறைகள் மற்றும் குஞ்சு பொரிப்பு, நோய் தடுப்பு மேலாண்மை குறித்து விரிவான பயிற்சி அளிக்கப்படும். மேலும் விவரங்களுக்கு இம்மையத்தை நேரிலோ அல்லது 04322-271 443 என்ற தொலைபேசி மூலமோ தொடர்பு கொள்ளலாம்.

## மேட்டூர் அணை நீர்மட்டம்: 25.47 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 25.47 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 161 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 496 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

## நெல்லையில் இடி, மின்னலுடன் மழை



திருநெல்வேலியில் திங்கள்கிழமை இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது. பலத்த காற்றும் வீசியதால் பல இடங்களில் மரங்கள் முறிந்து விழுந்தன.

திருநெல்வேலி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கடந்த சில தினங்களாக சுட்டெரிக்கும் வெயில் கொளுத்தி வந்தது. இதனால் மக்கள் கடும் அவதிக்குள்ளாகி வந்தனர். இந்நிலையில், திருநெல்வேலி பகுதியில் திங்கள்கிழமை பிற்பகல் 3 மணியளவில் திடீரென கருமேகங்கள் சூழ்ந்து வர, பலத்த மழை கொட்டத் தொடங்கியது.

இடி, மின்னலுடன் பலத்த காற்றும் வீசியது. சுமார் 30 நிமிஷங்களுக்கு மேலாக இந்த மழை நீடித்தது. இதனால் சாலைகள், தெருக்கள், தாழ்வான பகுதிகளில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

சாலைகளில் மழை வெள்ளம் தேங்கியதால் பல இடங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. வாகனங்கள் ஊர்ந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

பலத்த காற்று வீசியதால் பல இடங்களில் மரங்கள் முறிந்து விழுந்தன. மேலும், சாலையோரம் வைக்கப்பட்டிருந்த விளம்பரப் பதாகைகள், சாலைத் தடுப்புகள் சரிந்து விழுந்தன. சில இடங்களில் மின்சார வயர்களும் அறுந்து விழுந்ததால் மின்தடை ஏற்பட்டது.

சூறைக்காற்றால் வாழைகள் சேதம்: திங்கள்கிழமை சூறைக்காற்றுடன் பெய்த பலத்த மழை காரணமாக களக்காடு, மூங்கிலடி, சீவலப்பேரி, கருப்பன்தோப்பு, மஞ்சுவிளை, பத்தை, கருவேலன்குளம் உள்ளிட்ட சுற்று வட்டாரத்தில் பயிரிடப்பட்டிருந்த 5 லட்சத்துக்கும் அதிகமான வாழைகள் சேதமடைந்ததாகக் கூறப்படுகிறது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

பலத்த மழையால் மூங்கிலடி விவசாய நிலத்தில் மின்கம்பங்கள் சேதமடைந்தன.

பல இடங்களில் மரங்கள் சாலைகளில் விழுந்ததால் மின்விநியோகம் துண்டிக்கப்பட்டது.

மின்னல் பாய்ந்து இளைஞர் சாவு: களக்காடு கோவில்பத்து பகுதியைச் சேர்ந்த கந்தன் மகன் ஆறுமுகம் (37). இவர் தனது வீடு அருகேயுள்ள வயல் பகுதியில் திங்கள்கிழமை மாடு மேய்த்துக் கொண்டிருந்தாராம். அப்போது பலத்த மழை பெய்யத் தொடங்கியது. இதில் மின்னல் பாய்ந்து ஆறுமுகன் உயிரிழந்தார்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

16.04.2013 A.M

## தேங்காய் விலை மீண்டும் உயருகிறது



நத்தம்:வறட்சி காரணமாக, தென்னை மரங்கள் காய்ந்து வருவதால், தேங்காய் விலை, உயர்ந்து வருகிறது.திண்டுக்கல் மாவட்டத்தில் பழநி, அய்யம்பாளையம், பட்டிவீரன்பட்டி, நத்தம் மற்றும் சாணார்பட்டி பகுதி களில், தென்னை சாகுபடி அதிகளவில் நடக்கிறது. கருகும் மரங்கள்:பருவமழை பொய்த்ததால், வறட்சி ஏற்பட்டு, தென்னை மரங்கள், கருகத் துவங்கியுள்ளன.நத்தம், சாணார்பட்டி பகுதியில், 10 ஆயிரம் ஏக்கர், பரப்பில் தென்னை மரங்கள் சாகுபடி செய்யப்பட்டு உள்ளன. மழை பொய்த்ததால், இறவை பாசனத்தை நம்பி தண்ணீர் பாய்ச்சப்பட்டு வந்தது.

இந்நிலையில், வறட்சியால் நிலத்தடி நீர்மட்டமும் வெகுவாக குறைந்துவிட்டது. மேலும், மின்தட்டுப்பாடு காரணமாக, உரிய நேரத்தில், தண்ணீர் பாய்ச்ச முடியாமல், விவசாயிகள் திணறிவருகின்றனர்.இதனால், மரங்கள் கருகத் துவங்கியுள்ளன. பூக்கள் உதிர்கின்றன. குலைகளில் உள்ள தேங்காய்கள் மிகவும் சிறுத்து காணப்படுகின்றன. இதன் விளைவாக, தேங்காய் விளைச்சல் குறைந்து, விலை உயர்ந்து உள்ளது.கிடங்குகளுக்கு வரக்கூடிய முதல் ரக தேங்காய் 5 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம் 4 ரூபாய்க்கும், கழிவு காய் 2 - 2.50 ரூபாய் வரையிலும் கொள்முதல் செய்யப்படுகிறது.இவை, வெளிச் சந்தையில், அதிகபட்சமாக, 10 - 5 ரூபாய் வரை விற்கப்படுகின்றன.துளிர்க்காத பூக்கள்நத்தம் பகுதி தேங்காய் உற்பத்தியாளர் சங்க தலைவர்,

கண்ணுமுகமது கூறியதாவது:மழையில்லாததால், தென்னை மரங்களில் பூக்கள் துளிர்க்கவில்லை. இதனால், காய்ப்பு குறைந்துள்ளது. தேங்காய் விளைச்சல் குறைந்ததால், விலை உயர்ந்துள்ளது. தொடர்ந்து மழை பெய்யாமல் இதே நிலை நீடித்தால், தென்னை மரங்கள் முற்றிலும் கருகிவிடும். இவ்வாறு, அவர் கூறினார்.

## வறட்சியால் விளைச்சல் பாதிப்பு:சின்ன வெங்காயம் விலை உயர்வு



சேலம்:சின்ன வெங்காயம் விளைச்சலில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால், அதன் விலை உயர்ந்துள்ளது.தமிழகத்தில் சின்ன வெங்காயம், சேலம், நாமக்கல், தர்மபுரி, பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, ஒட்டன்சத்திரம், ஈரோடு ஆகிய மாவட்டங்களில், அதிக அளவில் பயிரிடப்படுகிறது. பருவமழை குறைவால், தமிழகத்தில் கடும் வறட்சி நிலவுகிறது. இந்த வறட்சிக்கு வெங்காய பயிர்களும் தப்பவில்லை. சின்ன வெங்காயம் விளைச்சலில், கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், வெங்காய வரத்தில், சரிவு ஏற்பட்டுள்ளது.

கர்நாடகா மாநிலம் மைசூர், ஆந்திர மாநிலம் குண்டல் பேட்டை ஆகிய இடங்களில் இருந்து, தமிழகத்துக்கு சின்ன வெங்காயம் வரத்து, முற்றிலும் நின்று விட்டது. இதனால் வெங்காய விலை, கடுமையாக உயர்ந்துள்ளது.தமிழகத்தில் சென்னை, சேலம் லீபஜார், விருது நகர் ஆகிய இடங்களில் உள்ள, பெரிய சந்தைகளுக்கு, நாள் ஒன்றுக்கு, 2,000 மூட்டை சின்ன வெங்காயம் மட்டுமே விற்பனைக்கு வருகிறது.நேற்றைய நிலவரப்படி, மொத்த விலையில், சின்ன வெங்காயம் கிலோ, 37 ரூபாய் முதல் 43 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. உழவர் சந்தைகள் மற்றும் காய்கறி சந்தைகளில், சில்லரை விலையில் கிலோ, 48 ரூபாய் முதல் 50 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது.

## துவக்கம் உள்ளூர் மா அறுவடையால்... செந்தூரா விலை சரிவு

தர்மபுரி: உள்ளூர் மா அறுவடை பணிகள் துவங்கிய நிலையில், முன்பருவ ரகமான செந்தூரா விலை சரிவடைய துவங்கியுள்ளது.முக்கனிகளில் முதல் கனியான மா தமிழகத்தில், ஒருங்கிணைந்த கிருஷ்ணகிரி மாவட்டத்தில், அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இவ்விரு மாவட்டங்களிலும் மானாவாரி நிலங்களில் மா அதிக அளவில் சாகுபடி செய்யப்படுவதோடு, வணிக ரீதியாக மா விற்பனை இரு மாவட்டங்களில் நடந்து வருகிறது.தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில், பெங்களூரா, நீலம், ருமானி, பங்கனப்பள்ளி, செந்தூரா, பீத்தர், அல்போன்ஹா, சேலம் பெங்களூரா, தோத்தாபுரி, மல்கோவா, ஜஹாங்கீர், இமாம்சந்த், குதாதாத் உள்ளிட்ட மா ரகங்கள் சாகுபடி செய்யப்படுகிறது.அங்கு உற்பத்தியாகும் தோத்தாப்புரி, அல்போன்ஸா உள்ளிட்ட ரகங்கள் மாங்கூழ் தயாரிக்க பயன்படுகிறது. இங்கு உற்பத்தியாகும் இந்த ரகங்கள், 75 முதல், 80 சதவீதம் மாங்கூழ் தொழிற்சாலைகளுக்கு விற்பனைக்கு செல்கிறது. வணிக ரீதியாக இரு மாவட்டங்களிலும் மா விற்பனை நடப்பதால், விவசாயிகளிடம் இருந்து முன் கூட்டியே வியாபாரிகள் மூன்று முதல் ஆறு ஆண்டுகள் வரையில் குத்தகை அடிப்படையில் விவசாயிகளிடம் இருந்து மா மரங்களை குத்தகைக்கு எடுத்து மா விற்பனை செய்து வருகின்றனர்.விவசாயிகள் மா தோட்டங்களை பாராமரிக்கும் பொறுப்பும் மட்டும் அவர்களை சார்ந்தது. முன் கூட்டியே பணம் பெற்று கொள்வதோடு, மா உற்பத்தி ஏற்ற, இறக்கம், விலை ஏற்ற இறக்கம் அனைத்தும் குத்தகைஎடுத்த வியாபாரிகளை போய் சேரும் சிறு விவசாயிகள் மட்டும் தங்கள் தோட்டங்களில் உற்பத்தி செய்யும் பழங்களை சந்தை வரை சென்று நேரடி விற்பனைக்கு களம் இறங்குவார்கள்.மா உற்பத்தியை பொறுத்த வரையில் ஓராண்டு பம்பர் உற்பத்தியும், அடுத்த ஆண்டு சுமாரான உற்பத்தியும் நடக்கும் என்பாதல், வியாபாரிகள் ஓராண்டு நஷ்டம் அடைந்தாலும் அடுத்தாண்டு லாபம் பெற வாய்ப்புள்ளது. கடந்தாண்டு பருவமழை பொய்த்து போன நிலையிலும், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் மா காய்ப்பு அதிகம் இருந்தது.ஆனால், கடந்த ஒரு மாதமாக வாட்டி எடுக்கும் வெயில் காரணமாகவும், மா மரங்களுக்கு தற்போது தேவையான மண் ஈரத்தன்மையும் இல்லாமல் இருப்பதால், காய்கள் பெருக்கம் அடைவது தடை பட்டிருப்பதோடு, வெயிலுக்கு காய்கள் வெம்பி உதிர துவங்கியுள்ளது.பெங்களூரு பகுதியில் கடந்த ஒரு மாதமாக முன் பருவ ரகமான செந்தூரா அறுவடை பணி துவங்கி விற்பனைக்கு வரத்துவங்கியது. பெங்களூரு பகுதியில் இருந்து பழ வியாபாரிகள் கொள்முதல் செய்து தர்மபுரியில் விற்பனைக்கு கொண்டு வந்தனர்.ஒரு கிலோ. 60 ரூபாய்க்கு விற்பனை நடந்தது. தற்போது, தர்மபுரி மாவட்ட மா தோட்டங்களில், செந்தூரா விற்பனைக்கு வரத்துவங்கியுள்ளது. இதனால், கிலோ, 25 ரூபாய்க்கு உழவர் சந்தைகளில்

விற்பனைக்கு கிடைக்கிறது. வெளி மார்க்கெட்டில், கிலோ, 30 ரூபாய் முதல் 40 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகிறது.பெங்களூரா காய்கள் கிலோ , 20 ரூபாய்க்கும், ஊறுகாய் போட பயன்படுத்தப்படும் கீரி ரக மாங்காய்கள் கிலோ 20 ரூபாய் முதல், 30 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகிறது.உள்ளூர் மா அறுவடை துவங்கியதால், குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்படும் மாம் பழங்களை மக்கள் விரும்பு வாங்க துவங்கியுள்ளனர்.

## தமிழகம், கேரளாவில் முட்டைவிலை 290 காசாக நிர்ணயம்

நாமக்கல்: தமிழகம், கேரளாவில், முட்டை விலை, 290 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை, தொடர் ஏற்றம் கண்டு வந்த நிலையில், நேற்று ஒரே நாளில், 20 காசுகள் சரிந்தது, பண்ணையாளர்களை கவலையடையச் செய்துள்ளது.நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 310 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, 20 காசு உயர்ந்து, 290 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது.முட்டை விலை, சில வாரங்களாக, ஏற்றமான சூழல் இருந்தது. இந்நிலையில், நேற்று ஒரே நாளில், 20 காசு வீதம் சரிந்தது, கோழிப் பண்ணையாளர்களை கவலையடைச் செய்துள்ளது.நாட்டின் பிற மண்டலங்களில், முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:சென்னை, 315, பெங்களூரு, 300, மைசூரு, 305, ஹைதராபாத், 255, மும்பை, 288, விஜயவாடா, 293, கோல்கத்தா, 305, பார்வாலா, 243, டில்லி, 255.இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 52 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை, கிலோ, 75 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## குறுகிய இடத்தில் செயல்படும் வேளாண் துறை அலுவலகம்

திருத்தணி:வாடகை கட்டடத்தில், குறுகிய இடத்தில் செயல்படும் வேளாண் பொறியியல் அலுவலகத்தில், போதிய இடவசதி இல்லாததால், ஊழியர்கள் அவதிப்படுகின்றனர்.

20 ஊழியர்கள்

திருத்தணி வேளாண் மை உதவி பொறியாளர் அலுவலகம் ம.பொ.சி., சாலையில் இயங்கி வருகிறது. கடந்த, 1999ம் ஆண்டு வரை, திருவள்ளூரில் செயல்பட்டு வந்தது.

பின், நிர்வாக வசதிக்காக, திருத்தணிக்கு மாற்றம் செய்யப்பட்டது. இந்த அலுவலகத்தில் எட்டு

உதவி செயற்பொறியாளர்கள், ஒரு இணை இயக்குனர் என மொத்தம், 20 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர்.

இந்த அலுவலகம் மூலமாக விவசாயிகளுக்கு, வேளாண் இடுபொருட்கள் மற்றும் வேளாண் கருவிகள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன.

இடம் இல்லை

மேலும், மினி டிராக்டர், டிராக்டர், பவர் டில்லர், பவர் கலப்பை உள்ளிட்ட கருவிகள் குறைந்த வாடகைக்கு விவசாயிகளுக்கு கிடைக்கிறது.

வேளாண் இடுபொருட்கள் மற்றும் கருவிகளை இருப்பு வைக்க இந்த அலுவலகத்தில் போதிய இடம் இல்லை.

மேலும், வாடகைக்கு விடப்படும் கருவிகள் அலுவலகத்திற்கு வெளியே வெட்ட வெளியில் கிடக்கின்றன. இதனால் அவை துருப்பிடித்து வீணாகி வருகின்றன.

கழிப்பறை மற்றும் குடிநீர் வசதியும் ஏற்படுத்தப்படவில்லை. இதனால், ஊழியர்கள் இயற்கை உபாதையை கழிக்க முடியாமல் அவதிப்படுகின்றனர். குறிப்பாக, பெண் ஊழியர்களின் நிலைமை மிகவும் பரிதாபமாக உள்ளது.

ரயில் நிலையம் அருகே, பயன்பாட்டில் இல்லாத அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு இந்த அலுவலகத்தை மாற்ற வேண்டும் என, அதிகாரிகளுக்கு பல முறை மனு அளித்தும் பலன் இல்லை. கல்வித்துறை மற்றும் வேளாண் அதிகாரிகள் இதுகுறித்து நடவடிக்கை எடுக்கவில்லை.

வாடகை கட்டடம்

மேல்நிலைப் பள்ளி வளாகத்திற்கு மாற்றப்பட்டால், விவசாயிகள் கருத்தரங்கு மற்றும் கலந்தாய்வு கூட்டங்கள் நடத்த ஏதுவாக அமையும்.

இதுகுறித்து, பெயர் வெளியிட விரும்பாத வேளாண் அலுவலர் ஒரு வர் கூறுகையில், "தற் போது வாடகை கட்டடத்தில் இயங்கி வரும் அலுவலகத்திற்காக மாதம், 8,360 ரூபாய் வாடகை தரப்படுகிறது. ஆண்டுக்கு, ஒரு லட்சம் ரூபாய் வரை வாடகைக்கு செலவிடப்படுகிறது' என்றார்.

## 19ம் தேதி விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்

திருவள்ளூர்:விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம், வரும், 19ம் தேதியன்று நடைபெறுகிறது. திருவள்ளூர் மாவட்டத்தின் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் மாதம்தோறும் நடந்து வருகிறது. இம்மாதத்திற்கான கூட்டம் வரும், 19ம் தேதி வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது. ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் காலை, 11:00 மணிக்கு நடைபெறும் இக்கூட்டத்துக்கு, ஆட்சியர் வீர

ராகவ ராவ் தலைமை வகிக்கிறார்.

இக்கூட்டத்தில், மா வட்டத்தில் உள்ள வே ளாண்மைத் துறை, தோட்டக்கலை துறை, வருவாய்த்துறை, மின்வாரியம், கூட்டுறவுத் துறை, பொதுப்பணி துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, மீன்வளத் துறை, கால்நடைத் துறை, வேளாண் விற்பனைத் துறை மற்றும் இதர வேளாண் சார்ந்த துறை அலுவலர்கள் கலந்து கொண்டு, விவசாயிகளின் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர்.

எனவே, விவசாயிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு, பயன் பெறுமாறு ஆட்சியர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## உழவர் பெருவிழா

வாலாஜாபாத்:வாலாஜாபாத் வேளாண்மை விரிவாக்க மையம் சார்பில், வாரணவாசி ஊராட்சியில் உழவர் பெருவிழா துவங்கியது.

வாரணவாசி சமுதாயக் கூடத்தில் நடந்த விழாவிற்கு, ஆட்சியர் சித்ரசேனன் தலைமை தாங்கினார். சட்டமன்ற உறுப்பினர்கள் கணேசன், சோமசுந்தரம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கால்நடைத் துறை அமைச்சர் சின்னையா கலந்து கொண்டு, உழவர் பெருவிழாவை துவக்கி வைத்து, 10 விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்கள் வழங்கினார். வேளாண்மை உதவி இயக்குனர் முருகன் வரவேற்றார். ஊராட்சி தலைவர் தெய்வநாயகி நன்றி கூறினார்.

சுங்குவார்சத்திரம்: ஊராட்சி ஒன்றிய துவக்க பள்ளி வளாகத்தில் நடந்த உழவர் பெரு விழாவிற்கு, ஊராட்சி தலைவர் சாந்திபாபு தலைமை தாங்கினார். ஒன்றிய குழு தலைவர் வெங்கடேசன், ஒன்றிய கவுன்சிலர் பாலமுருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் பெருமாள், சிறப்புரை விருந்தினராக கலந்து கொண்டு, விவசாயிகளுக்கு கை தெளிப்பான், விசை தெளிப்பான், விவசாய இடுபொருட்களை வழங்கினார். விவசாயம் குறித்த விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி நடந்தது. ஸ்ரீபெரும்புதூர் ஒன்றிய வேளாண்மை துறை உதவி இயக்குனர் சுசிலா வரவேற்றார். தோட்ட கலைத் துறை உதவி இயக்குனர் ராணி நன்றி கூறினார்.

## ஈச்சங்கருணை ஏரியில் கலங்கல் பழுது நீர் விரயத்தால் விவசாயம் பாதிப்பு

நெரும்பூர்:ஈச்சங்கருணை ஏரியில், கலங்கல் பழுது காரணமாக, ஏராளமான நீர் விரயமாகி, ஏரி வறண்டு காணப்படுவதால், விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

நெரும்பூர் அடுத்த ஈச்சங்கருணையில், பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில், 150 ஏக்கர் பரப்பளவு கொண்ட ஏரி அமைந்துள்ளது.

இதன் மூலம், அருகில் உள்ள 400 ஏக்கர் நிலத்தில், அங்குள்ள விவசாயிகள், ஒரு போகம் நெல் பயிரிடுகின்றனர். ஆனால், ஏரி நீண்டகாலமாக தூர் வாரப்படாததால், நீர் பிடிப்பு பகுதி, 3 அடி ஆழம் வரை தூர்ந்துள்ளது.

புறக்கணிப்பு

மதகு, கலங்கல் ஆகியவைகளும் பல ஆண்டுகளாக பராமரிக்கப்படவில்லை. இந்நிலையில், பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று, சமீபத்தில், மதகு மட்டும் சீரமைக்கப்பட்டது. ஆனால், சிமென்ட் காரை பெயர்ந்து, உடைப்பு ஏற்பட்டுள்ள கலங்கலை பழுது பார்க்காமல், புறக்கணித்து விட்டனர்.

இதனால், ஆண்டுதோறும், மழைக்காலத்தில், ஏரியில் நிரம்பும் நீர், ஓரிரு மாதங்கள் மட்டுமே தேங்குகிறது. நாளடைவில், கலங்கள் உடைப்பு வழியாக, நீர் வெளியேறி, ஏரி வறண்டு விடுகிறது. வரத்து கால்வாய், பாசன கால்வாய் ஆகியவையும் தூர்ந்துள்ளன. இதனால், ஒரு போக விவசாயத்திற்கே நீர் போதாமல், விவசாயிகள் தவிக்கின்றனர்.

பற்றாக்குறை

இதுகுறித்து, அப்பகுதி விவசாயி ஒருவர் கூறுகையில், ""முந்தைய காலங்களில், இந்த ஏரி நீரை பயன்படுத்தி, மூன்று போகம் விவசாயம் செய்தோம். ஆனால், தற்போது, ஒரு போக விவசாயத்திற்கே, தண்ணீர் பற்றாக்குறையாக உள்ளது.

""எனவே, பழுதடைந்துள்ள கலங்கலை சீரமைத்து, தண்ணீரை தேக்கினால், விவசாயத்திற்கும் பயன்படும். நிலத்தடி நீர் மட்டமும் குறையாமல் இருக்கும். அதிகாரிகள் தான் நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்றார்.

## தண்ணீர் பற்றாக்குறை கோடை பயிர்களாக வெண்டை, வெள்ளரி சாகுபடி

திருக்கழுக்குன்றம்:திருக்கழுக்குன்றத்தை சுற்றியுள்ள கிராமங்களில், தண்ணீர் பற்றாக்குறையை சமாளிக்க, கோடை பயிர்களாக வெண்டை, வெள்ளரி போன்றவை பயிரிடப்பட்டுள்ளன.

திருக்கழுக்குன்றம் - பி.வி., களத்தூர் சாலையில், கொல்லமேடு கிராமம் உள்ளது. இப்பகுதியில், விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. கடந்த சில ஆண்டுகளாக, பருவமழை பொய்த்து போனதால், மூன்று போகம் வரை, பயிர் சாகுபடி செய்த விவசாயிகள், தற்போது, ஒருபோகம் மட்டுமே நெல் பயிரிடுகின்றனர்.

நிலத்தடி நீர் குறைந்ததால், கிணறுகளில் நீர்

மட்டமும் குறைந்து காணப்படுகிறது. எனவே, இப்பிரச்னைக்கு தீர்வாக, குறுகிய கால பயிர்களை

பயிரிட துவங்கியுள்ளனர். நீர் பற்றாக்குறையை சமாளிக்க, நிலம் முழுவதும் நீர்பாசனம் செய்ய வேண்டிய, காய்கறி பயிர்களை தவிர்த்து, குழிகளில் மட்டும் தண்ணீர் பாய்ச்சும், கொடி வகை பயிர்களை தேர்வு செய்து பயிர் செய்கின்றனர்.

தற்போது, கோடைக் காலம் துவங்கி உள்ளதால், வெள்ளரி, வெண்டை போன்றவை நல்ல விற்பனை ஆகிறது. எனவே, வெயிலுக்கு குளிர்ச்சியை தரக்கூடிய வெண்டை, வெள்ளரி போன்றவற்றை, விவசாயிகள் பயிர் செய்துள்ளனர். இப்பயிர் நட்ட, 40வது நாளில் இருந்து பலன் தர ஆரம்பிக்கும். இரண்டு மாதங்கள் வரை காய் காய்க்கும்.

மூன்றாவது மாதம் குறைந்துவிடும். உற்பத்தி செய்யும் காய்கறிகளை, சென்னையில் உள்ள காய்கறி கடைகளுக்கு அனுப்புகின்றனர்.

இதுகுறித்து, விவசாயி குமார் கூறியதாவது:

கொடி வகை பயிர்களுக்கு, ஆறு அடி இடைவெளி விட்டு, ஒரு அடி ஆழம் குழி வெட்டி, மக்கிய தொழு உரம், ரசாயன உரம் கலந்து, விதை நேர்த்தி செய்த தரமான விதைகளை நடுகிறோம். ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் பாய்ச்சுகிறோம். களைகள் முளைக்காமல் பராமரித்து பாதுகாக்கிறோம். தேவைக்கு ஏற்ப பூச்சிக்கொல்லி மருந்துகளை தெளிப்போம்.

செடிகள் நட்டு 30 நாட்கள் ஆகிறது. இன்னும், 10 நாட்களில் காய்க்க
ஆரம்பிக்கும். இந்த ஆண்டு 50 சென்டில் வெள்ளரி, 50 சென்டில் வெண்டை பயிர் செய்துள்ளேன். இரண்டுக்கும் சேர்த்து, 15 ஆயிரம் ரூபாய் செலவாகி உள்ளது.

கிலோ 15 ரூபாய்க்கு குறையாமல் விற்பனை செய்தால், இந்தாண்டு 20 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைக்கும் என,
எதிர்பார்க்கின்றேன்.
இவ்வாறு, அவர்
தெரிவித்தார்.

### தீவன சாகுபடிக்கு மானியம் ரூ.95.20 லட்சம் ஒதுக்கீடு

திருச்சி: திருச்சி மாவட்டத்தில் மானியத்துடன், கால்நடை தீவன பயிர் சாகுபடி செய்ய 95.20 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.வறட்சியால் பாதிக்கப்பட்ட காவிரி டெல்டா மாவட்டங்களில் 5,600 ஏக்கர் நிலத்தில் தீவன பயிர் சாகுபடி செய்ய, 15 கோடி ரூபாயை தமிழக அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. திருச்சி மாவட்டத்தில், ஏற்கனவே மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பசுந்தீவனம் வளர்ப்பதற்காக 700 ஏக்கர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.தற்போது வறட்சி நிவாரணத்திற்காக மேலும், 700 ஏக்கரில்குறைந்த நீரைக் கொண்டு குறுகிய காலத்தில், தீவனச் சோளப்பயிர் உற்பத்தி செய்வதற்காக 95 லட்சத்து 20 ஆயிரம் ரூபாயாகும். இதில் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படவுள்ளது.இந்த மானியத் தொகை மூலம், விவசாயிகள் நிலம் பண்படுத்திடவும், வரப்புகள், பாத்திகள் அமைப்பதற்கும், விதைகள் தெளிப்பதற்கும் உரம் மற்றும்

களை எடுத்தல், அறுவடை செய்வதற்கு ஒரு ஏக்கருக்கு ஆகும் செலவில் மதீப்பீடான 13,600 ரூபாயில், 50 சதவீத மானியம் வழங்கப்பட உள்ளது.மேலும், இத்திட்டத்திற்கு விவசாயிகளுக்கு ஓர் ஏக்கருக்கு 16 கிலோ தரச்சான்று பெற்ற வீரிய தீவன சோள விதைகள், கால்நடை பராமரிப்புத் துறையில் மூலம், விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.இதனால் உற்பத்தி செய்யப்படும் தீவனப்பயிர், தங்கள் உபயோகத்திற்கு போக மீதமுள்ள உபரி தீவன பயிரை அருகில் உள்ள, பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தின் மூலம், தீவன பற்றாக்குறை உள்ள கறவை மாடுகள் வளர்க்கும் உறுப்பினர்களுக்கு 50, சதவீத மானிய விலையில் விற்கவும், வழிவகை செய்யப்பட்டிருப்பதாக, மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை தெரிவித்துள்ளது.

## தேயிலைக்கு விலை: நிர்ணயம் செய்ய பரிந்துரை

குன்னூர் : "பசுந்தேயிலைக்கு விலை நிர்ணயம் செய்வது தொடர்பாக, அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குன்னூரில் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற தேயிலை வாரிய தலைவர் பானு நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

தேயிலை சட்டத்தின் கீழ், கலப்பட தேயிலை விற்பனையாளர்கள் மீது, தேயிலை வாரியம் நடவடிக்கை எடுக்க முடியாது.

இதை கட்டுப்படுத்தும் வகையிலான நடவடிக்கை எடுக்க, வாரிய அதிகாரிகளிடம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

"பசுந்தேயிலைக்கு குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்ய வேண்டும்' என உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இதன் பேரில், பெங்களூரில் உள்ள இந்திய தோட்டப்பயிர்கள் மேலாண்மை அமைப்பு சார்பில், ஆய்வு செய்யப்பட்டது.

அந்த ஆய்வில், தற்போது நடைமுறையில் உள்ள 65:35 சதவீதம் பரிவர்த்தனை முறை சரியாக இயங்கி வருவதாக தெரிவிக்கப்பட்டது.

சிறு தேயிலை தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் 70 சதவீத தேயிலை ஏலத்தில் விற்க வாரியம் அறிவுறுத்தியுள்ளது.

இதனை தொடர்ந்து, மாவட்ட அளவில் குழு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த குழுவினர் மாதந்தோறும் பசுந்தேயிலைக்கு சராசரி விலையை நிர்ணயம் செய்யும்.

இத்திட்டம் குறித்து அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

தேயிலையின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதியை கண்காணிக்க, தென்னிந்திய தேயிலை கவுன்சில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த கவுன்சில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்யப்படும் தேயிலை தரத்தை கண்காணிக்கும்.

இவ்வாறு பானு கூறினார்.

## கடும்வறட்சியால் தண்ணீர் தட்டுப்பாடு

மஞ்சூர் : கீழ்குந்தா பேரூராட்சி பகுதிகளில் கடும் வறட்சியால் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மஞ்சூர் கீழ்குந்தா பேரூராட்சியில் மொத்தமுள்ள 15 வார்டுகளுக்கு அம்மக்கல், ஊசிமலை, கட்லாடா உள்ளிட்ட நீராதாரங்களிலிருந்து தண்ணீர் எடுத்து வரப்பட்டு, மக்களுக்கு வினியோகிக்கப்படுகிறது.

இந்நிலையில், கடும் வறட்சி நிலவி வருவதால் வனப்பகுதிகளில் நீராதாரம் குறைந்து, தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டு வருகிறது.

கடும் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் முன்பு, முன் எச்சரிக்கை பணிகளை மேற்கொள்ள பேரூராட்சி
நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## வறட்சியால் குறைந்த வாழைக்காய் பருமன் விலை இல்லாமல் விவசாயிகள் ஏமாற்றம்

ஈரோடு: ஈரோடு பகுதியில் நிலவும் வறட்சியால், வாழைக்காயின் பருமன் குறைந்ததால், உரிய விலை கிடைக்காமல் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.தேசிய அளவில் வாழைப்பழ உற்பத்தியில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது. காவிரி டெல்டா மாவட்டங்களில் பரவலாக வாழை பயிரிட்டாலும், திருச்சி, கரூர் மாவட்டங்களில் தான் அதிகமாக சாகுபடியாகிறதுகடந்த ஓராண்டாக, தமிழகம் முழுவதும் வறட்சி நிலவுவதால், ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த பெரும்பாலான விவசாயிகள், நெல், மஞ்சள் தவிர்த்து, கரும்பு, வாழை பயிரிட்டுள்ளனர்.சத்திமங்கலம் பகுதியில் பயிரிடப்படும், பச்சை வாழை ரகங்கள் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டு, பெங்களூரு உள்பட பெரும் நகரங்களுக்கு ஏற்றுமதியாகிறது. காலிங்கராயன் வாய்க்கால், கீழ்பவானி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கொடுமுடி, காரணாம்பாளையம் இடங்களில், செவ்வாழை, தேன்வாழை, பூவம் ஆகியவை சாகுபடி செய்யப்படுகிறது.பங்குனி மாதம் முதல், வாழைக்காய்கள் அறுவடை சீசன் என்பதால், விவசாயிகள், வெளிமார்கெட்டுக்கு வாழை காய்களை, மொத்தமாக தார் கணக்கில் விற்பனை செய்து வருகின்றனர்.கோடை வெயில் உச்சத்தை தொட்டதாலும், தண்ணீர் இல்லாததாலும், வாழை மரங்கள் காய்ந்து வருகின்றன. வறட்சியால், வாழைக்காய்களின் பருமன் குறைந்ததால், எதிர்பார்த்த விலை இல்லாமல், விவசாயிகள் கவலையில் உள்ளனர்.இதுகுறித்து கருங்கரடு விவசாயி பூங்காவனம் கூறியதாவது:ஈரோடு மாவட்டம் கருங்கரடு பகுதியில் நிலவும் வறட்சியால், வாழை பயிரிட்ட விவசாயிகள் பலரும் பாதிக்கப்பட்டனர். வறட்சியால், வாழை

மரங்கள் காய்ந்து, வாழைக்காய்களின் பருமன் பாதிக்கப்பட்டது. அதனால், 200 ரூபாய்க்கு விற்ற ஒரு தார் வாழைக்காய், 150 ரூபாய்க்கு விற்பனையாகிறது, என்றார்.

## கேசவபுரத்தில் உழவர் பெருவிழா

திருநெல்வேலி:கேசவபுரத்தில் உழவர் பெருவிழா நடந்தது.தமிழக அரசு வேளாண்மைத்துறையின் மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை அதிகரிக்கும் நோக்கில் உழவர் பெருவிழாவை கிராமங்கள் தோறும் நடத்தி வருகிறது. செங்கோட்டை அருகே உள்ள கேசவபுரத்தில் உழவர் பெருவிழா நடந்தது.

செங்கோட்டை வேளாண்மை உதவி இயக்குனர் பாலசுப்பிரமணியன் தலைமை வகித்தார். புதூர் டவுன் பஞ்., தலைவர் ராதா முன்னிலை வகித்தார். கவுன்சிலர் மதியழகன், தோட்டக்கலை உதவி இயக்குனர் முருகானந்தம், அலுவலர் ஜெகநாதன், பண்ணை மேலாளர் கனகம்மாள், துணை வேளாண்மை அலுவலர் ஷேக் முகைதீன், வேளாண் பொறியியல் துறை உதவி பொறியாளர் கருப்பசாமி, விதை பரிசோதனை உதவி இயக்குனர் முகமது காசிம், விதை சான்றளிப்பு துறை உதவி இயக்குனர் அசோக் குமார் உட்பட பலர் கலந்து கொண்டு பேசினர்.

விழாவில் கால்நடை உதவி மருத்துவர் ஜெயபால் ராஜா கால்நடைகளுக்கு தடுப்பூசி மற்றும் குடற்புழு நீக்க சிகிச்சை அளித்தார். பார்த்தீனிய ஒழிப்பு, மண் மாதிரி சேகரிப்பு மற்றும் விதை நேர்த்தி செயல் விளக்க முகாம் நடந்தது. அரசின் திட்டங்களை விளக்கும் வகையில் கலை நிகழ்ச்சிகள் நடந்தன. திராளான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

வேளாண்மை அலுவலர் நபிஷா நன்றி கூறினார்.

ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் முருகன், கருப்பசாமி, உத்தமன், குமார், சம்சுதின், நாகராஜன், உதவி விதை அலுவலர் பரமசிவன், பாலசுப்பிரமணியன் மற்றும் ஆத்மா அலுவலர்கள் சக்திவேல், சிவகுமார், குமார் செய்திருந்தனர்.

## தேனி வெங்காய விவசாயிகள் விலை ரூ.40க்கு விற்பதால்

தேனி:தேனி மாவட்டத்தில் வறட்சியால், வெங்காய சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டாத நிலையில், தற்போது கிலோ 40 ரூபாய்கு விற்பனையாவது, நுகர்வோருக்கு கண்ணீரையும், விவசாயிகளை ஏக்கத்திலும் ஆழ்த்தியுள்ளது. தேனி மாவட்டத்தில், சின்ன வெங்காயம் 1,200 எக்டேரில்,சாகுபடி செய்யப்படுகிறது. தேனி, ஆண்டிபட்டி, குன்னூர், சின்னமனூர் உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்துப் போனது. வறட்சி உள்ளிட்ட காரணங்களால், நடப்பு ஆண்டில் 600 எக்டேரில் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டது. 60 நாள் பயிரான வெங்காயம், தற்போது அறுவடை செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு நல்ல விளைச்சல் இருந்த போது, துவக்கத்தில் கிலோ 35 ரூபாய்க்கும் ஒரு கட்டத்தில்,

கிலோ 6 ரூபாய்க்கும் விற்பனையானது. விவசாயிகள் ஓரளவுக்கு பலன் அடைய முடிந்தது. சிலருக்கு செலவு செய்த பணம் மட்டுமே கிடைத்தது. நடப்பு ஆண்டில் தென் மேற்கு, வட கிழக்கு பருவ மழைகள் பொய்த்து போனதால், விவசாயிகளின் வெங்காய சாகுபடி பரப்பு பாதியாக குறைந்தது. கிணற்று பாசனம் உள்ளவர்கள் மட்டும் தைரியமாக சாகுபடி செய்தனர். தற்போது, அறுவடை துவங்கி பல வாரங்கள் ஆகிறது. வரத்து குறைவால், வெங்காயத்திற்கு நல்ல விலை கிடைக்கிறது. ஒரு கிலோ 40 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் பாதி விவசாயிகள் விலை கிடைக்கும் போது, வெங்காயம் சாகுபடி செய்யாமல் விட்டுவிட்டோமே, என்ற ஏக்கத்தில் உள்ளனர்.தண்ணீரை விலைக்கு வாங்கியாவது சாகுபடி செய்திருந்தால், ஓரளவுக்கு லாபம் பார்த்திருக்கலாம் என்ற ஆதங்கத்தில் உள்ளனர்.நடப்பு ஆண்டிலாவது பருவ மழை கை கொடுக்குமா.. காலம் தான் பதில் செல்ல வேண்டும்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

16.04.2013 A.M

---

## மிளகாய் விவசாயிகள் வருத்தம் கூடுதல் விலை கிடைத்தாலும் விளைச்சல் குறைவால் நஷ்டம்



மேட்டூர் : கொளத்தூர் மிளகாய்க்கு தற்போது கூடுதல் விலை கிடைத்தாலும், விளைச்சல் குறைந்து போனதால் தங்களுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் வருத்ததத்தில் உள்ளனர். சேலம் மாவட்டம் மேட்டூர் அருகே உள்ள கொளத்தூர் மற்றும் சுற்றுப் பகுதிகளில் மிளகாய் பயிரிடப்படுகிறது. கொளத்தூர் மிளகாய் அதிக காரம் கொண்டது. நல்ல நிறம் உடையது. மற்ற பகுதிகளில் கிடைக்கும் மிளகாயை காம்புடன் மட்டுமே பறிக்க முடியும். ஆனால் கொளத்தூர் மிளகாயை செடியிலேயே காம்பு நீக்கி பறிக்கலாம். இதனால் கொளத்தூர் மிளகாய்க்கு நல்ல கிராக்கி உண்டு.

இப்பகுதி விவசாயிகளின் முக்கிய பணப்பயிர் மிளகாய். இங்கு விளையும் சம்பா ரக மிளகாய் தமிழகம் முழுவதும் பிரசித்தி பெற்றது. வாரந்தோறும் வெள்ளி மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் கொளத்தூர் வார சந்தைக்கு மிளகாய் விற்பனைக்கு வரும்.

கடந்த வாரம் முதல் தர கொளத்தூர் மிளகாய் ரூ.100 வரையிலும், இரண்டாம் ரகம் ரூ.70 வரையிலும் விற்பனை செய்யப்பட்டது. நடப்பாண்டில் வறட்சி காரணமாக மிளகாய் விளைச்சல்

குறைந்ததால் நல்ல விலை கிடைத்து வருகிறது. கடந்த ஆண்டு அதிகபட்சம் இதே நாளில் ஒரு கிலோ ரூ..70 வரை விற்கப்பட்டது. கொளத்தூர் மிளகாய்க்கு நல்ல விலை கிடைத்த போதும். விளைச்சல் குறைந்துள்ளதால், தங்களுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

## வெளிமாநில வரத்து குறைந்ததால் தக்காளி விலை கிடுகிடு உயர்வு



கிருஷ்ணகிரி : கிருஷ்ணகிரி மாவட்டம் ராயக்கோட்டையில் உள்ள தக்காளி மண்டி மிகவும் புகழ் பெற்ற மண்டியாகும். இங்கு கடந்த இரு மாதங்களுக்கு முன் ஒரு கிரேடு (26 கிலோ) தக்காளி ரூ.30 முதல் ரூ.50 வரை மட்டுமே விற்பனையானது. இதனால் விவசாயிகள் பெரும் நஷ்டம் அடைந்தனர்.

தற்போது மழையின்றி விளைச்சல் குறைந்தாலும், வெளிமாநில தக்காளி வரத்து குறைந்ததாலும் விற்பனை சூடு பிடிக்க துவங்கி உள்ளது. அதன்படி தற்போது ஒரு கிரேடு தக்காளி ரூ.450 முதல் ரூ.540 வரை விற்பனையாகிறது. இன்னும் சில நாட்களில் ரூ.900 வரை செல்லும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

## காய்கறி விலை குறைந்ததால் மார்ச்சில் பணவீக்கம் 5.96 சதவீதமாக சரிவு



புதுடெல்லி : காய்கறிகள் விலை குறைந்ததால் மார்ச் மாதத்தில் பணவீக்கம் கடந்த 3 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு குறைந்து 5.96 சதவீதமாக உள்ளது. இது ரிசர்வ் வங்கி ஏற்கனவே கணித்த 6.8 சதவீதம் என்ற அளவை விட மிகவும் குறைவாகும். மொத்த விலை புள்ளி அடிப்படையில் கடந்த பிப்ரவரியில் பணவீக்கம் 6.84 சதவீதமாக இருந்தது. இது 2012 மார்ச்சில் 7.69 சதவீதமாக இருந்தது. கடந்த பிப்ரவரியில் தொழிற்துறை உற்பத்தி 0.6 சதவீதம் குறைந்தது.

இதற்கிடையே மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், காய்கறிகள் விலை குறைந்ததால் உணவுப் பொருள் உற்பத்தி பணவீக்கம் குறைந்தது. பிப்ரவரியில் 12.11 சதவீதமாக இருந்த காய்கறிகள் பணவீக்கம் மிக அதிகமாக மைனஸ் 0.95 சதவீதமாக சரிந்துள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**16.04.2013 A.M**

---

## விவசாயிகள் விவசாயம் மட்டுமின்றி கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டால் கூடுதல் பொருள் ஈட்டலாம் கலெக்டர் ராஜாராமன் பேச்சு

தேவகோட்டை,

விவசாயிகள் விவசாயம் மட்டுமின்றி கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டால் கூடுதல் பொருள் ஈட்ட லாம் என்று கலெக்டர் ராஜாராமன் கூறினார்.

உழவர்பெருவிழா

சிவகங்கை மாவட்ட வேளாண்மை துறை சார்பில் உழவர் பெருவிழா தேவ கோட்டை ஒன்றியம் சருகனி ஊராட்சியில் நடைபெற்றது. விழாவுக்கு கலெக்டர் ராஜா ராமன் தலைமை தாங்கி, வேளாண்மை துறை சார்பில் 12 பேருக்கு ரூ.2.92 லட்சம் செலவில் வேளாண் பொருட் களும், வேளாண்மை பொறியி யல்துறை சார்பில் 1.75 லட்சத் தில் வேளாண் கருவிகளும், தோட்டகலைத்துறை சார்பில் 6 பேருக்கு மரக்கன்றுகளும், 19 பேருக்கு ரூ.4.6 லட்சம் நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசினார்.

அப்போது அவர் கூறியதா வது:-

தமிழகத்தில் 2-வது பசுமை புரட்சி ஏற்படுத்த வேண்டும் என்ற திட்டத்தில் மாவட்டத் தில் உள்ள அனைத்து துறை களையும், விவசாயிகள் மேம் பாட்டிற்காக முடிக்கி விடப் பட்டு அது தற்போது, இயக்க மாக நடந்து வருகிறது. விவசா யிகள் விதைப்பது முதல் அறு வடை செய்வது வரையிலும், அதன் பின் விற்பனை செய்வது வரை அனைத்து ஆலோசனை களையும் இதுபோன்ற முகாம் களில் பெறலாம்.

கால்நடைவளர்ப்பிலும் ஆர்வம்

2013ம் ஆண்டில் ஒரு கோடியே 20 லட்சம் செலவில் கால்நடை ஆஸ்பத்திரிகள் கட்ட உத்தரவிடப்பட்டுள்ளது. ஆயிரத்து 255 பயனாளிகளுக்கு கறவைமாடுகளும், 5 ஆயிரத்து 200 பயனாளிகளுக்கு ஆடு களும் வழங்கப்பட்டுள்ளது. மானிய விலையில் தீவனமும் வழங்கப்பட்டு வருகிறது. 600 ஏக்கரில் தீவனபுல் வளர்க்க நிலமும் வழங்கப்பட்டுள் ளது.

விவசாயிகளிடையே போட் டி யி ருந்தால் நல்ல சூழ்நிலை உருவாகும் என்கிற நோக்கத் தில் பரிசும் வழங்கப் பட்டு வருகிறது. வேளாண்மை துறை, பொறியியல்துறை மூலம் விவசாயிகளின் வேலை நேரத்தையும், செலவையும் மிச்சப்படுத்துவதற்காக நவீன பண்ணை விவசாயத்தையும் இயந்திரமயமாக்கம் செய்யப் பட்டு வருகிறது. அதோடு விவசாயிகள் விவசாயத்தை மட்டும் நம்பியிருக்காமல் கால் நடை வளர்ப்பிலும், கோழி, முயல் வளர்பிலும் ஆர்வம் காட்டி பொருள் ஈட்ட வேண் டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

முன்னதாக வேளாண்மை துறைஇணை இயக்குனர் செல் லத்துரை வரவேற்றார். விழா வில் சோழன் சித.பழனிச்சாமி எம்.எல்.ஏ., யூனியன் தலைவர் பி.ஆர்.செந்தில்நாதன், வேளாண் பல்லைக்கழக தலை வர் பேராசிரியர் சாமிநாதன், குன்றக்குடி கால்நடைதுறை வேளாண் அறிவியல் கல்லூரி பழனிச்சாமி, சருகணி ஊராட்சி மன்ற தலைவர் அரசன் பிரான்சிஸ் ஆகியோர் பேசினார்.

விழாவில் உதவி செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் பாண்டி, மாவட்ட கவுன்சிலர் முத்துலட்சுமி தசரதன், ஒன் றிய கவுன்சிலர் ஜெயபுஷ்ப சேவியர், தேவகோட்டை அ.தி.மு.க.நகர் செயலாளர் ராமச்சந்திரன், முன்னாள் ஆவீன் சேர்மன் பொன்னத்தி சண்முகம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## வேளாண்மைதுறை சார்பில் கடலூர் ஒன்றியத்தில் உழவர் பெருவிழா

உப்பிடமங்கலம்,

கடலூர் ஒன்றியத்தில் வேளாண்மைத்துறை மற்றும் சகோதரத்துறை கள் சார்பில் உழவர் பெருவிழா நடை பெற்றது.

உழவர் பெருவிழா

தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதா சட்டப் பேரவை யில் அறிவித்துள்ள படி 2-ம் பசுமைப்புரட்சி ஏற்படுத்து வதற்காக பல்நோக்கு திட்டங்களை தமிழகம் முழுவதும் செயல் படுத்தி வருகிறார்.

அதன்படி தமிழக முழுவதும் ஏப்ரல் 14-ந் தேதி முதல் மே மாதம் 8- தேதி வரை உழவர் பெருவிழா வேளாண்மைத்துறை சார்பில் நடைபெறுகிறது.

இதன்படி கடவூர் ஒன்றியத் தில் கீழப்பகுதி ஊராட்சியில் உள்ள தரகம்பட்டி நடுநிலைப் பள்ளி வளாகத்தில் உழவர் பெருவிழா நடைபெற்றது.

கடவூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஜெயந்தி தலைமை தாங்கினார். தரகம்பட்டி ஊராட்சித் தலைவர் மாரியப் பன், ஒன்றிய கவுன்சிலர் உமா மகேஸ்வரி கண்ணன் ஆகி யோர் முன்னிலை வகித்தனர். வேளாண்மை அலுவலர் வேல்முருகன் வரவேற்று பேசி னார். கால்நடை டாக்டர் மணி வண்ணன், தோட்டக் கலை உதவி இயக்குநர் வீர மணி, தோட்டக்கலை அலு வலர் நாகராஜ், வேளாண்மை பொறியியல் துறை அலுவலர் அசோகன், வேளாண்மை விற்பனை பிரிவு அலுவலர் கணேசன் ஆகியோர் பேசினார்கள்.

மண்வள அடையாள அட்டை

வேளாண்¬மை துணை இயக்குநர் சுப்ரமணி, விவ சாயிகளுக்கு நிலக்கடலை, வெண்டை விதை மற்றும் மண்வள அடையாள அட்டை 100 நபருக்கு வழங்கி னார். பின்னர் நெல் விதை, நேர்த்தி குழித்தட்டு, காய்கறி, நாற்றுமுறை, கதிர் அடிக்கும் கருவி, ஒட்டுண்ணி நீக்குதல் ஆகியவற்றின் செயல் விளக்கம் செய்து காட்டப்பட் டது.

கலந்து கொண்டவர்கள்

ஆத்மா பணியாளர்கள் நிர்மலா, போதும் பொண்ணு, சரவணன், கால்நடை டாக்டர்கள் வசந்தகுமார், ஜெயராஜ், கால்நடை ஆய் வாளர் கக்கன் மற்றும் விவ சாயிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். துணை வேளாண்மை அலுவலர் குணசேகரன் நன்றி கூறினார்.

ஏற்பாடுகள்

விழாவில் உதவி வேளாண் அலுவலர்கள் நவநீதன், இளங்கோவன், மணிகண்டன், ரமேஷ், மாரிமுத்து, சதிஷ் குமார், சுரேஷ், பெரியசாமி, சக்திவேல் ஆகியோர் ஏற்பாடு செய்தனர்.

## கீழையூர் வட்டாரத்தில் உழவர் பெருவிழா விவசாய கண்காட்சி நடைபெற்றது

நாகப்பட்டினம்,

கீழையூர் வட்டாரத்தில் உழவர் பெருவிழாவை யட்டி விவசாய கண் காட்சி நடைபெற்றது.

உழவர் பெருவிழா

நாகை மாவட்டம் கீழையூர் வட்டாரத்தில் உழவர் பெரு விழா நடைபெறுகிறது. இதன் தொடக்க விழா திருவாய்மூர் கிராமத்தில் நடைபெற்றது. விழாவிற்கு திருவாய்மூர் ஊராட்சி மன்ற தலைவர் வீரம்மாள்குப்புசாமி தலைமை தாங்கினார். கீழையூர் வேளாண்மை உதவி இயக்கு னர் புருசோத்தம்மன் வரவேற் றார். கீழையூர் வட்டார வேளாண்மை அலுவலர் பாலசுப்பிரமணியன் கலந்து கொண்டு வேளாண்மை திட் டம் மற்றும் தொழில் நுட் பங்கள் குறித்து கூறினார்.

கண்காட்சி

விழாவையட்டி விவசாய தொழில்நுட்பங்கள் குறித்த கண்காட்சி நடந்தது. இதை சுற்றுவட்டார கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் பார்வை யிட்டனர். கீழையூர் ஒன்றிய குழு தலைவர் மீனா, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் பரமேஸ் வரிவேதையன், கீழையூர் அட்மா திட்ட தலைவர் சதிஷ், மாவட்ட அட்மா குழு உறுப் பினர் கோவி.ஆறுமுகம், உதவி வேளாண்மை அலுவலர் கள் ஜெயராமன், வீரசுதாகர், கணேசன் உள்பட பலர் கலந்து கொண்டனர். விழா ஏற்பாடு களை அட்மா வட்டார தொழில்நுட்ப மேலாளர் முல் லைவேந்தன் செய்து இருந்தார். முடிவில் உதவி வேளாண்மை அலுவலர் வைரப்பன் நன்றி கூறினார்.